**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 உடுமலைப்பேட்டை</u>**

**முன்னிலை :– திருமதி.T.நித்யகலா, பி.காம்.,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**Crl.M.P.No. 192/2026**

சுப்பிரமணி(46),
த/பெ. முருகேசன்,
2/40, பிச்சுகுட்டி சந்து,
உடுமலைப்பேட்டை.

**....மனுதாரர்/எதிரி/வாகன உரிமையாளர்**

**/எதிர்/**

<u>அரசுக்காக காவல் ஆய்வாளர்</u>
உடுமலைப்பேட்டை காவல் நிலையம்
குற்ற எண். 850/2024,
சட்டப்பிரிவு 5, 7(1) of LR Act

**...எதிர்மனுதாரர்/புகார்வாதி**

இம்மனு கடந்த 04.03.2026 ஆம் தேதி மூலம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, 09.03.2026 ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பரிசீலணை செய்யப்பட்டு, இன்று 09.03.2026 ஆம் தேதி இம்மனு மீது இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் திரு,M சிக்கந்தர் பாஷா, BBM., LLB., அவர்கள் ஆஜராகியும் மற்றும் குற்றமுறையீட்டு காவல் நிலையத்தாரர் தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்களும் ஆஜராகி கூறிய வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு இறுதியாக இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

1. இம்மனு பிரிவு 497 of BNSS பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனு குறித்து அரசு உதவி வழக்கறிஞருக்கும், எதிர் மனுதாரர்

காவல் நிலையத்தாருக்கும் அறிவிப்பு கொடுக்கப்பட்டது.

3. மனுதாரர் தரப்பில், ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கில் மனுதாரரை கைது செய்யும் போது மேற்படி காவல் துறையினர் இவ்வழக்குச் சொத்தான மனுதாரரின் அலைபேசியையும் இவ்வழக்கில் கைப்பற்றியதாகவும், மேற்படி அலைபேசியானது நீதிமன்றத்தில் PR No.31/2026 என்ற எண் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், வழக்குச் சொத்தின் உரிமையாளர் மனுதாரர் என்றும், மேற்படி அலைபேசியானது மனுதாரரின் அன்றாட பயன்பாட்டிற்கு மிகவும் தேவைப்படுவதால் மேற்படி அலைபேசியை மனுதாரர் வசம் இடைக்காலமாக ஒப்படைக்கும் பட்சம் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எனவே மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று வாதிட்டார்.

5. அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை-2 மற்றும் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தார் தரப்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபணையில், வழக்குச் சொத்தான செல்போன் எதிரிக்கு சொந்தமான என்றும், உடுமலை காவல் நிலைய குற்ற எண்.850/2024-ல் கைப்பற்றப்பட்டதாகவும், மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மீண்டும் இதுபோன்ற குற்ற செயலுக்கு ஈடுபடுத்தக்கூடும் என்றும், வழக்குச் சொத்தினை உருமாற்றம் செய்து விற்கவும், நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தாமல் இருப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றும், எனவே மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க எதிர்மனுதாரர்/அரசு தரப்பில் கடும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

6. **தற்போது தீர்வுக்குரிய விவரம் யாதெனில் மனுதாரர் கோரியுள்ள வழக்கு சொத்தினை மனுதாரரின் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்க இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

(06.01) வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்குச் சொத்தாக குறிப்பிடப்பட்டுள்ள கருப்பு நிற VIVO செல்போன் –1 கைப்பற்றப்பட்டு உடுமலை காவல் நிலைய குற்ற எண்.850/2024–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் PR No.31/2026 என்ற எண்ணில் ஒப்படைக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(06.02) மேலும், மனுதாரருக்கு சொந்தமான வழக்கு சொத்தான VIVO என்ற பெயர் கொண்ட செல்போன்–1 மனுதாரருக்கு சொந்தமானது என்பதை கருத்திற்கொண்டும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கருத்திற்கொண்டும், இவ்வழக்கின் எதிரி அபராதத் தொகை செலுத்தி இவ்வழக்கு முடிவுற்ற நிலையில், மேல்முறையீடு எதுவும் செய்யப்படாத நிலையில், மேற்படி இவ்வழக்குச் சொத்தை நீதிமன்றத்தில் வைப்பதால் எந்த பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், மனுதாரர் இவ்வழக்குச் சொத்தை இடைக்காலப் பொறுப்பில் ஒப்படைக்க இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்வு காணப்படுகிறது. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள VIVO செல்போனை மனுதாரர் பொறுப்பில் ஒப்படைக்க இம்மனு அனுமதிக்கத்தக்கது என தீர்வு கண்டிருப்பதால் மேற்படி வழக்குச் சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்க உத்தரவிடப்படுகிறது.

## <u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர், தனக்காக தானே ரூ.10,000/–த்திற்கான பிணைய பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும்.

2. தலைமை எழுத்தர், குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி 257(1)–ன் படி பஞ்சநாமா தயார் செய்ய வேண்டும்.

3. மேற்படி வழக்கு சொத்தினை விற்கவோ, அடமானம் வைக்கவோ உருமாற்றம் செய்யவோ கூடாது. மேலும் நீதிமன்றம் கோரும்போது ஆஜர்படுத்தவேண்டும் என்ற உறுதி மொழி ஆவணம் எழுதி தரவேண்டும்.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் வருடம் மார்ச் மாதம் 09 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.03.09 17:33:34 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.